**தலைப்பு 126 - கல்வி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 126 - கல்வி அமைச்சின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 30 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல், மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதி ரூபா 58,451.25 மில்லியனாகும். மீளாய்வாண்டினது முடிவளவில் அதில் ரூபா 56,283.01 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினது நிகர நிதியேற்பாட்டில் 3.71 சதவீதமான ரூபா 2,168.24 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் வருமாறு.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்பு, நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | நிகர நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 41,104.05 | 40,746.61 | 357.44 | 00.87 |
| மூலதனம் | 17,347.20 | 15,536.40 | 1,810.80 | 10.44 |
| மொத்தம் | 58,451.25 | 56,283.01 | 2,168.24 | **03.71** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகள்**

அமைச்சிற்குரிய விடய இலக்கம் 12601 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றம் விதித்திருந்த வரம்புகளும் உள்ளவாறான பெறுமதியும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய வரம்பு | உள்ளவறான து | ஆகக் குறைந்த வரம்பு | உள்ளவாறா னது | அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1,225.00 | 1,187.05 | 970.00 | 973.79 | 2,310.00 | 1,780.65 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 969.46 மில்லியனாகும். விபரம் வருமாறு.

| வைப்புக் கணக்கினது இலக்கம் | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0006/0064/000 | 0.16 |
| 6000/0000/00/0015/0039/000 | 956.58 |
| 6000/0000/00/0015/0177/000 | 0.19 |
| 6000/0000/00/0015/0199/000 | 5.51 |
| 6000/0000/00/0015/0208/000 | 7.02 |
| மொத்த | 969.46 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

கல்வி அமைச்சின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளுள் போதியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

அமைச்சு கிழே காணப்படும் இரு பதிவேடுகளைப் பேணியிராததுடன், ஒரு பதிவேடு முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| கணனிகள், துணைப் பாகங்கள், மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை |
| பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை. |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 டிசெம்பர் 18 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | வேயங்கொடை சியனே வித்தியாபீடத்தின் நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

வேயங்கொடை சியனே வித்தியாபீடம் அமைந்துள்ள 85 ஏக்கரைக் கொண்ட காணியினது உரித்தை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்று இருக்கவில்லை.

### 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் அளித்தல்

மீளாய்வாண்டின்போது அமைச்சிற்கு வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்பட்டிராததுடன், அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 121,577,300 ஆகவிருந்தது.

### 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.4.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாடான ரூபா 80.87 மில்லியன் முற்றாக எஞ்சியிருந்தது.

(ஆ) பன்னிரண்டு செலவின விடயங்களுக்குக் கூடுதலாக நிதி ஏற்பாடு செய்யப்படுதல் அல்லது திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தால் கட்டு நிதி வழங்கப்படாமை காரணமாக அச் செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகர நிதியில் 48 முதல் 99 சதவீதம் வரையான சேமிப்பு ஏற்பட்டிருந்தது.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 211.77 மில்லியனான 02 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

விடய இலக்கம் 12601, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 1,780.65 மில்லியன் ஆகும். அந் நிலுவை மீதிகளுள் 05 ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வரும் ரூபா 102.66 மில்லியன் கூட்டுத் தொகையுடைய கடன் மீதிகளை அமைச்சு அறவிடத் தவறியிருந்தது.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், கணக்கீட்டு வழுவின் காரணமாக உருவாகிய ரூபா 1.15 மில்லியன் கூட்டுத் தொகையுடைய வரவு மீதியானது 01 முதல் 05 ஆண்டு காலமாக நிலவி வந்தபோதும், 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அதனைத் திருத்துவது தவறியிருந்தது.

(இ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறான தனிப்பட்ட மீதிகளது வகைப்படுத்தல் பொழிப்பினது கூட்டுத் தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கினது மீதி என்பவற்றுக்கிடையே இனங் காணப்படாத ரூபா 890,652 வித்தியாசம் நிலவியது.

(ஈ) பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பிணைச் சான்றிதழைப் பெறாது உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சொத்துக் கடனில் ரூபா 128,150 மீதியானது அந்த உத்தியோகத்தர் இடமாற்றத்திற்குள்ளான நெடுஞ்சாலைகள் அமைச்சிடமிருந்து தவணை ரீதியில் அறவிடப்பட்டிருந்தது. ஆயினும், குறித்த காலப்பகுதியின்போது கணக்குப் பொழிப்பின் வாயிலாக அக் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(உ) ஓய்வு பெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2.39 கடன் மீதியை அவர்களது ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**3.7.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின்போது வெளி நாட்டுக் கடன் மற்றும் 03 உதவிச் செயற்திட்டங்களுக்கு ரூபா 5795.76 மில்லியன் செலவிடப்பட்டபோதும், அச் செலவினம் தொடர்பாகப் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

**3.7.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்த 150 நாட்களுக்குள் அமைச்சினது செயலாற்றல் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், அவ்வறிக்கை 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 சொத்து முகாமைத்துவம்

அமைச்சினது சொத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| கட்டிடம் | சியனே வித்தியா பீடத்தின் 16 உத்தியோகபூர்வ மனைகள் | - | ஓராண்டிற்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 05 மோட்டார் வாகனங்களும் 02 மோட்டார் சைக்கிள்களும் | - | நான்கு ஆண்டுகளுக்கு மேல் |
| பாடசாலை உபகரணங்கள் | 1000 பாடசாலைகள் செயற்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கிடையே விநியோகிக்கப்படவிருந்த கணனி மேசைகளும் நாற்காலிகளும், கட்டில்கள், உருக்கு அலுமாரிகள், ஆய்வுகூட நாற்காலிகளும் வேறு உபகரணங்களும் களஞ்சியத்திலிருந்தன. | - | ஓராண்டிற்கு மேல் |
| | இரசாயனப் பொருட்கள் | - | ஓராண்டிற்கு மேல் |
| | 14 பொருட்களினது 01 முதல் 2091 வரை அளவிலானவை | - | 02 முதல் 05 ஆண்டுகள் வரை |
| பாடசாலைப் புத்தகங்கள் | கொழும்பு 07 இல் உள்ள மகளிர் வித்தியாலயத்தின் 1 முதல் 12 ஆந் தரம் வரையிலான பல்வேறு விடயங்களுக்குரிய 4,393 பாடசாலைப் புத்தகங்கள் | - | ஓராண்டிற்கு மேல் |
| ஏனைய சொத்துக்கள் | 2,770,402 சீருடைப் பெக்கட்கள் | 693,762,709 | 07 மாதங்களுக்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| காசு | ஹொரனை தேசிய பாடசாலை ஒன்றில் வெளிவாரி விடய மற்றும் 16 ஒருசேர் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி | 1,381,000 | ஓராண்டிற்கு மேல் |
| | 43 பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் வங்கியில் நிலையான வைப்பிலிட்டிருந்த பணம் | 633,803,600 | ஓராண்டிற்கு மேல் |

(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வை நடாத்தி அவ்வறிக்கையை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதியளவிலும் 78 தேசிய பாடசாலைகள், 18 ஆசிரியர் நிலையங்கள், 25 கணனி நிலையங்கள், ஒறுகொடவத்தைக் களஞ்சியம் மற்றும் பத்தலகெதரக் களஞ்சியம் என்பன குறித்த அறிக்கைகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டின் பொருட்டே இறுதிப் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தது.

(இ) வெளி நபர்கள் அனுபவித்தவாறிருக்கும் சொத்துக்கள்

---

கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள், ஆசிரியர் வித்தியாலயம் மற்றும் தேசிய கல்வி வித்தியாபீடம் என்பவற்றிடமுள்ள 04 முதல் 224 பர்ச்சுக்கு இடைப்பட்ட அளவுடனான நகர்ப் புறத்தில் அமைந்த 08 காணிகளை அனுமதியும் அங்கீகாரமும் இல்லாது வெளி நபர்கள் பயன்படுத்தியவாறிருந்தனர். அதி கூடிய மதிப்பீட்டுடனான இச்சில காணிகளின் விசாலமும் தற்போதைய பெறுமதியும் பற்றிய தகவல்கள் அமைச்சிடம் இருக்கவில்லை.

(ஈ) சுவீகரிக்கப்படாத சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்துதல்

---

பாதுகாப்புச் சேவைகள் வித்தியாலயத்திற்குத் தேவையான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2008 ஆம் ஆண்டு முதல் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,191.97 மில்லியன் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியவாறு ரூபா 1,098.24 மில்லியன் செலவில் நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 1.9329 ஹெக்டயார் காணியில் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதும், வித்தியாலயக் காணியின் சட்டபூர்வ உரித்தைக் கல்வி அமைச்சு சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

---

2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அமைச்சிடமிருந்த தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள் ரூபா 3,437.50 மில்லியன் ஆகும்.

**3.9 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | |
| (i) XLVIII அத்தியாயத்தின் 31.1 ஆம் பிரிவு | நுகேகொட மகளிர் பாடசாலை அதிபருக்கெதிரான ஆரம்ப விசாரணைகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளரின் 2011 சனவரி 07 ஆந் திகதிய ED/S/84/6/2/1 ஆம் இலக்க அறிக்கைப்படி குற்றப் பத்திரிகையை வழங்குவதற்கும் அதன் பிரகாரம் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்படுவதற்கும் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அப் பரிந்துரையைக் கவனத்திற் கொள்ளாது உடனடியாக அமுலுக்கு வரும் பொருட்டு 2011 பெப்ரவரி 07 முதல் கட்டாய லீவில் அவரை அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்திகதி தொடக்கம் 2015 டிசெம்பர் 31 வரை எதுவித பணியுமாற்றாது அவருக்கு வழங்கப்பட்டிருந்த மொத்தச் சம்பளமும் படியும் ரூபா 3,737,426 ஆகும். 2016 ஜுன் 27 ஆந் திகதிய PSC/DP/4/2011/SLEAS/1 இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு பணிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் முடிவளவில், தீவடங்கிலும் உள்ள 350 தேசிய பாடசாலைகளில் 49 தேசிய பாடசாலைகளில் 2009 ஆம் ஆண்டு முதலாகவும் 106 பாடசாலைகளில் 2016 ஜுன் வரையிலும் அதிபர்களது வெற்றிடங்களுக்கு பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (iii) 11 ஆம் தொகுதியின் XLVIII அத்தியாயத்தினது 1.2, 13.2 மற்றும் 17.12 ஆம் பிரிவுகள் | (i) இருபத்தொரு உத்தியோகத்தர்களுக்கு எதிராக 03 முதல் 10 ஆண்டுகளாக ஒழுக்காறு தொடர்பான புகார்கள் நிலவி வந்தபோதும், 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | | (ii) சிறுவர் துஷ்பிரயோகப் புகார்களுக்குள்ளான உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக வெகு துரிதமாக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுத் தண்டனை வழங்கப்பட வேண்டியபோதும், அவ்வாறு தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளாமலும் அவர்களை வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றஞ் செய்தோ அல்லது அப் பாடசாலையிலேயே அவர்கள் தொடர்ந்து இருப்பதற்கோ இடமளித்ததன் மூலம் குறித்த பாடசாலைச் சிறார்களது கல்வி நடவடிக்கைகள் போன்றே பாடசாலையில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் அது மிகத் தடையாக அமைந்திருந்தது. |
| (iv) | XII அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | 2015 ஆம் ஆண்டினபோது 27 தேசிய பாடசாலைகளின் 128 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் அங்கீகாரமின்றி 3396 நாட்கள் லீவு பெற்றிருந்தனர். |
| (v) | VII ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு | 2015 ஆம் ஆண்டின்போது 86 தேசிய பாடசாலைகளின் 448 பதவியணியினர் 8030 நாட்களுக்குச் சம்பளமற்ற லீவில் சென்றிருந்தனர். எனினும், அவ்விடுமுறைகளின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | III ஆம் அத்தியாயம் | கல்வி அமைச்சின் 46 கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் 5 முதல் 22 ஆண்டு காலமாகவும், அபிவிருத்தி உதவியாளர் பதவியைச் சேர்ந்த 84 பேரில் 76 பேர் 10 ஆண்டுகளுக்கு மேலாகவும், 8 பேர் 6 முதல் 9 ஆண்டு காலமாகவும், ஏனைய கல்விசாராச் சேவைகளைச் சேர்ந்த 42 உத்தியோகத்தர்கள் 07 முதல் 25 ஆண்டுகாலமாகவும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய இடமாற்றஞ் செய்யப்படவில்லை. சில உத்தியோகத்தர்கள் தற்போதுள்ள கிளைகளிலும் சில உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சிற்கு வந்த நாள் முதலாகவும் ஒரே கிளையிலும் பணியாற்றியவாறு இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>-------------------------------------- | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2) | தெஹிவளையில் உள்ள மகளிர் பாடசாலை ஒன்றில் 2015 ஆம் ஆண்டில் 43 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 441,980 கூட்டுத் தொகையுடைய முற்பணம் |

தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. சில நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தைத் தீர்து வைப்பதற்கு முன்னரே மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டுமிருந்தது.

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 384 | ஹொரணை தேசிய பாடசாலை ஒன்றினது இலங்கை வங்கிக் கிளையில் பேணப்படும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நடைமுறைக் கணக்கில் 16 சந்தர்ப்பங்களில் ரூபா 138,785 கூட்டுத் தொகைக்கு காசாக வழங்கப்படுவதற்கான 16 காசோலைகள் வரையப்பட்டிருந்தன. அதில் ரூபா 96,285 கூட்டுத் தொகைக்கான 10 காசோலைகள் ஒரே ஆசிரியருக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 1645 | கொழும்பு 07 இல் உள்ள மகளிர் பாடசாலை ஒன்றில் 03 வாகனங்களதும் தெஹிவளை மகளிர் பாடசாலை ஒன்றில் 02 வாகனங்களினதும் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்புகளும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1645(அ) | அமைச்சினது வாகனங்களின் சம்பவப் பதிவேடுகள் பொது 267 மாதிரிப் படிவத்திற்கமைய நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்பட்டிருக்க வில்லை. |

(இ) கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள்

-----------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 2014 ஜுன் 18 ஆந் திகதிய 19/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி மற்றும் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் 217 ஆம் பிரிவு | 2015 மார்ச் மாதத்தில் இட மாற்றஞ் செய்யப்பட்ட இலங்கை பாடசாலை அதிபர் சேவையைச் சேர்ந்த 48 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டு முடிவிலும் குறித்த இட மாற்றத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டிராத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகக் குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2007 டிசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அரசாங்கப் பாடசாலை ஒன்றில் 08 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றஞ் செய்யப்பட்டிராத சந்தர்ப்பங்கள் தெரிய வந்தன. விபரம் வருமாறு. |

(i) 109 தேசிய பாடசாலைகளைச் சேர்ந்த 4089 ஆசிரியர்கள் 08 முதல் 27 ஆண்டுகளாக இட மாற்றமின்றி ஒரே பாடசாலையில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

| | | |
|---|---|---|
| | | (ii) 83 தேசிய பாடசாலைகளைச் சேர்ந்த 495 ஆசிரியர்கள் அவர்களது நியமனத்திற்கு ஒவ்வாத பாடங்களைப் புகட்டுவதற்குப் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர். குறிப்பாக, 32 தேசிய பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர் பயிற்சியைப் பெற்றிராத 132 ஆசிரியர்கள் ஆரம்பத் தரங்களுக்குப் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். |
| (iii) | 2013 மே 23 ஆந் திகதிய 23/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 6.1(i) ஆம் பந்தி, 6.1(iv) ஆம் பந்தி மற்றும் 6.3(ii) ஆம் பந்தி | (i) கொழும்பு மருதானையில் உள்ள ஆண்கள் தேசிய பாடசாலை ஒன்றில் 2016 ஆம் ஆண்டிற்கென முதலாந் தரத்தில் சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக தேர்தலில் வாக்களிக்க உரித்தில்லாதிருந்த ஆண்டுகளின் பொருட்டு 29 சந்தர்ப்பங்களிலும், தூரத்தின் அடிப்படையில் 3 சந்தர்ப்பங்களிலும், சகோதரர்கள் என்ற அடிப்படையில் 10 சந்தர்ப்பங்களிலும், கல்வியுடன் நேரடித் தொடர்புடைய பதவியணியினர் என்ற அடிப்படையில் 9 சந்தர்ப்பங்களிலும் 51 சிறுவர்களுக்கு கூடுதலாகப் புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன.<br><br>(ii) குறித்த கடமை முடிவுற்ற உடனேயே அக் கடமையை நிறைவேற்றியமையை உறுதி செய்வதற்குத் தமது கையெழுத்தை இட வேண்டுமாயினும், சிறுவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளின்போது நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் புள்ளிகளுக்கான படிவங்களில் கையெழுத்திட்டு அப்புள்ளிகளைச் சான்றுறுதிப்படுத்தியிருக்கவில்லை. |
| (iv) | 2013 மே 23 ஆந் திகதிய 23/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 18 ஆம் பந்தி | ஒரு மாணாக்கரிடமிருந்து ரூபா 1,000,000 வீதம் பெற்று, அதில் ரூபா 600,000 பெறுமதியை குறிக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பற்றுச்சீட்டை வழங்கி ஒரு பாடசாலையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். |
| (v) | 2013 மே 23 ஆந் திகதிய 23/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 11.3 ஆம் பந்தி | ஒரே பிள்ளையினது பெயர் பல்வேறு பாடசாலைகளிலும் இருப்பதைத் தவிர்ப்பதற்காக மாகாண கல்விப் பணிப்பாளரது தலைமையில் கூட்டம் நடாத்தப்பட்டு அதி கூடிய முன்னுரிமையைப் பெற்றுள்ள பாடசாலைப் பதிவேடு தவிர ஏனைய பதிவேடுகளில் அப் பிள்ளையினது பெயரை நீக்கி பிரவேசத்தை எதிர்பபார்த்து இருக்கும் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள ஏனைய பிள்ளைகளுக்கு |

| | | |
|---|---|---|
| | | அச்சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| (vi) | 2013 நவெம்பர் 28 ஆந் திகதிய 07/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி | கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், ஹொரணை தேசிய பாடசாலை ஒன்றில் ரூபா 1 மில்லியன் முதல் ரூபா 5 மில்லியன் வரை, தெஹிவளை மகளிர் பாடசாலை ஒன்றில் ரூபா 1.1 மில்லியன் முதல் ரூபா 2.5 மில்லியன் வரை, கொழும்பு 07 மகளிர் பாடசாலை ஒன்றில் ரூபா 0.3 மில்லியன் முதல் ரூபா 9.5 மில்லியன் வரை எனப் பணத்தை 2015 சனவரி முதல் திசெம்பர் வரை குறுகிய கால முதலீடுகளில் வைப்பிலிட்டு நலன்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது பாடசாலை அபிவிருத்தி நடைமுறைக் கணக்குகளில் அவை வைக்கப்பட்டிருந்தன. |
| (vii) | 2013 நவெம்பர் 28 ஆந் திகதிய 07/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 11 ஆம் 12 ஆம் பந்திகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 500,000 க்குக் கூடுதலான கொள்வனவுகள் அமைச்சின் கொள்வனவுக் குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கு இனங்காதவாறு ஹொரணை தேசிய பாடசாலை ஒன்றில் பாடசாலை மட்டத்தில் கூறு விலைகளைக் கோரி தெரிவு செய்யப்பட்ட வழங்குநரிடமிருந்து ரூபா 208,815 மற்றுமொரு வழங்குநரிடமிருந்து ரூபா 336.250 என மொத்தமாக ரூபா 545,605 க்கான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (viii) | 2013 நவெம்பர் 28 ஆந் திகதிய 07/2013 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 11.3 ஆம் வழிகாட்டல் | (i) சுற்றறிக்கை மற்றும் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் பொறுப்பேற்கப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு உப ஒப்பந்தங்கள் வழங்கப்படலாகாது. எனினும், தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் ஒட்டுமொத்த நிர்மாண நடவடிக்கைகளுக்கு ரூபா 428,650 மதிப்பீட்டுக் கிரயத்தில் பிரத்தியேக ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ஒப்பந்தத்தை வழங்கியிருந்தார். கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்போது அதிபரால் தயாரிக்கப்பட்ட வெற்று இன்வொய்ஸ் பத்திரத்தின் மூலம் ரூபா 265,150 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | | (ii) 03 செயற்திட்டங்களுக்குக் கல்வி அமைச்சினால் தேசிய பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 600,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 212,750 பெறுமதியான நிர்மாண |

| | | | |
|---|---|---|---|
| | | | வேலைகளுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன், வேலை முடிவடையாததும் பிரதேச பொறியியலாளரால் சிபார்சு செய்யப்படாததுமான 419 சதுர அடிக்கு ரூபா 31,771 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது. |
| | | (iii) | ஹொரணை தேசிய பாடசாலை ஒன்றின் பணிக்கு நிதிப் பிரமாணங்கள் மற்றும் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளிலிருந்து விலகியவாறு ஒப்பந்தத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து, நான்கு ஆசிரியர்களது பிரத்தியேக கணக்கின் மூலம் பணம் வழங்கப்பட்டிருந்தது. கூறு விலைகளைக் கோராது பொருட் கொள்வனவுக் குழுவால் தெரிவு செய்யப்படாத வழங்குநர் ஒருவரிடமிருந்து பூசுவதற்கான மையைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 31,788 செலவிடப்பட்டிருந்தது. |
| (ix) | 2013 நவெம்பர் 07 ஆந் திகதிய 38/2003 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | (i) | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 110 தேசிய பாடசாலைகளில் நிலவிய 1524 ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் 770 மேலதிக ஆசிரியர்கள் என்பவற்றைத் தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. |
| | | (ii) | தேசிய பாடசாலை ஒன்றினது பிரதி அதிபர்களுக்கு ஒரு வாரத்தில் 10 காலப் பகுதியின்போது கல்வி கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், 35 தேசிய பாடசாலைகளில் 73 பிரதி அதிபர்களுக்கு எக்காலப்பகுதியிலும் கல்வி கற்பிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. 9 தேசிய பாடசாலைகளில் 10 பிரதி அதிபர்களுக்கு 02 முதல் 06 வரையிலான காலப்பகுதிக்கே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. |
| | | (iii) | உதவி அதிபர்களுக்கு வாரத்தில் 40 நிமிடங்கள் கல்வி கற்பிப்பதற்கு 12 காலப்பகுதி வழங்கப்படலாம். எனினும், 12 தேசிய பாடசாலைகளின் 19 உதவி அதிபர்களுக்கு எக்காலப்பகுதிக்கேனும் கல்வி கற்பிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லலை. 12 தேசிய பாடசாலைகளின் 18 உதவி அதிபர்களுக்கு வழங்கப்பட்ட காலப்பகுதி 02 முதல் 06 வரையில் அமைந்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | பாடங்களைப் புகட்டும் ஆசிரியர்கள் முறையே ஒரு வாரத்தில் குறைந்தது 40 நிமிடங்களைக் கொண்ட 35 காலப்பகுதியில் கடமையில் ஈடுபட வேண்டுமாயினும், 77 தேசிய பாடசாலைகளின் 442 ஆசிரியர்களுக்கு பாடங்களைப் புகட்டுவதற்கான ஒரு காலப் பகுதியேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 79 தேசிய பாடசாலையின் 906 ஆசிரியர்களுக்கு பாடங்களைப் புகட்டும் 16 காலப்பகுதிக்கும் குறைவான எண்ணிக்கையே வழங்கப்பட்டிருந்தது. இதற்குப் புறம்பாக, ஹொரணை தக்ஷிலா வித்தியாலயத்தின் 171 ஆசிரியர்களில் 16 பேருக்கு மாத்திரமே காலப்பகுதி வழங்கப்பட்டிருந்தது. |
| (x) | 2015 மாரச் 26 ஆந் திகதிய இலக்கம் (i) 12/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | (i) | தேசிய பாடசாலை ஒன்றிற்குரிய பிரதி அதிபர்களது எண்ணிக்கையிலும் கூடுதலாக 55 தேசிய பாடசாலைகளில் 99 பிரதி அதிபர்களும், உதவி அதிபர்களது எண்ணிக்கையிலும் கூடுதலாக 28 தேசிய பாடசாலைகளில் 61 உதவி அதிபர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| | | (ii) | தேசிய பாடசாலை ஒன்றில் மேற்பார்வைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு வாரம் ஒன்றிற்குக் குறைந்தது 40 நிமிடங்களைக் கொண்ட 16 பாடங்களைப் புகட்டுவதற்கான காலப்பகுதி வழங்கப்பட வேண்டுமாயினும், 14 தேசிய பாடசாலைகளின் 59 ஆசிரியர்களுக்கு காலப்பகுதி எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 12 தேசிய பாடசாலைகளில் உள்ள 66 ஆசிரியர்களுக்கு 16 காலப்பகுதிக்கும் குறைவான எண்ணிக்கையே வழங்கப்பட்டிருந்தது. |
| (xi) | 2008 செப்டம்பர் 19 ஆந் திகதிய 37/2008 மற்றும் 2015 ஜுன் 30 ஆந் திகதிய 23/2013(ii) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | | 66 தேசிய பாடசாலைகளில் வரம்பை மீறி சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணாக்கரின் மொத்த எண்ணிக்கை 6,105 ஆகும். அவற்றுள் பிரசித்தம் வாய்ந்ததாகக் கருதப்படும் 32 தேசிய பாடசாலைகளில் வரம்பிற்கு அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மாணாக்கரின் மொத்த எண்ணிக்கை 5,373 ஆகும். |
| (xii) | 2012 நவெம்பர் 23 ஆந் திகதிய 42/2012 ஆம் | | தீவின் 9 மாகாணங்களில் 411 விசேட கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவின. விசேட |

| | |
|---|---|
| இலக்கச் சுற்றறிக்கை | கல்விப் பயிற்சி பெற்ற 355 ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளிலோ அல்லது வகுப்பு அறைகளிலோ பணியிலமர்த்தப்பட்டிருந்தனர். |

## 3.10 வெளி நாட்டு உதவியுடனான செயற்திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும்

மீளாய்வாண்டின்போது அமைச்சு வெளி நாட்டு நிதியளிப்பின் கீழ் 02 செயற்திட்டங்களையும் 01 நிகழ்ச்சித்திட்டத்தையும் அமுலாக்கியிருந்தது. கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், அவற்றினது மதிப்பிடப்பட்ட கிரயத்தினது கூட்டுத் தொகை ரூபா 6,391.49 மில்லியன் ஆகும். அச்செயற்திட்டங்களின் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 5,795.76 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ் வெளி நாட்டு உதவிச் செயற்திட்டங்கள் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கல்வித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களினது கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனை தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மஹிந்தோதய தொழில்நுட்ப வித்தியாபீடத்தை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 657 மில்லியன் சுக வாழ்வே முக்கியத்துவமானது எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளது சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) தொழில்நுட்ப வித்தியாபீடக் கட்டிடத்தைப் புதுப்பிப்பதற்கு 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 50 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான பௌதிகத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், நிதியேற்பாட்டில் ரூபா 19.63 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இப்புதுப்பித்தல் நடவடிக்கைகளது பௌதீக முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) செயற்திட்டத்திற்கான நிதியேற்பாட்டின் 07 ஆம் சுட்டின் பிரகாரம் பிரகாரம் 343 பாடசாலை அதிபர்களுக்கும் 593 பிரதி அதிபர்களுக்கும் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. 155 தேசிய பாடசாலைகளில் அதிபர்களுக்கான பதவிகள் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் வெற்றிடமாக இருந்ததுடன், அதில் 49 அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் 2009 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருப்பவையாகும்.

(iv) செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்ப வித்தியா பீடக் கட்டிடங்கள் 250 ஆகும். அதில் 195 கட்டிடங்களது நிர்மாண வேலை 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 86 வித்தியாபீடங்கள் மாணாக்கரது பாவனைக்குத் திறந்து விடப்பட்டிருந்தன. கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 35 மஹிந்தோதய வித்தியாபீடக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 17 பூர்த்தியாகி 12 பாவனைக்குத் திறந்து விடப்பட்டிருந்தன. அதில் 06 பாடசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனைகளின்போது நிர்மாணிக்கப்பட்டவற்றுள் சில இடங்களில் வெடிப்பும் கீறல்களும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) மஹிந்தோதய தொழில்நுட்ப வித்தியாபீடங்களுக்குச் சகல வசதிகளும் வழங்கப்பட்டிருந்தன. எனினும், பதுளை, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களின் 03 பாடசாலைகளில் பொறியியல் தொழில்நுட்பத்தைப் பயிலுவதற்கான வகுப்புகளில் ஒரு மாணவரேனும் இல்லாதிருந்ததுடன், திருகோணமலை மாவட்ட பாடசாலை ஒன்றில் உயிரியல் தொழில்நுட்பத் துறைப் பாட வகுப்பில் எந்தவொரு மாணவரும் சேர முன்வரவில்லை.

(vi) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தொழில்நுட்ப விஞ்ஞான பாடத்திற்கு தீவடங்கிலும் உள்ள பாடசாலைகளில் நிலவிய ஒட்டு மொத்த ஆசிரியர் வெற்றிடங்கள் 660 ஆகும்.

(vii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது தொழில்நுட்ப விடயக் கல்விக்கு 42,514 மாணாக்கர், விஞ்ஞான மற்றும் கணித பாடக் கல்விக்கு 118,901 மாணாக்கர் தம்மைப் பதிவு செய்திருந்தனர். முன்னைய ஆண்டில் தொழில்நுட்ப விடயக் கல்விக்கு 28,985 மாணாக்கரும் விஞ்ஞான மற்றும் கணித பாடக் கல்விக்கு 118,550 மாணாக்கரும் பதிவு செய்திருந்தனர். மேலும், மீளாய்வாண்டின்போது வணிகக் கல்விப் பாடங்களுக்கு 117,238 மாணாக்கர்கள் பதிவு செய்திருந்தனர். முன்னைய ஆண்டின்போது இது 119,093 ஆகவிருந்தது.

(viii) 2014 ஆம் ஆண்டின்போது செயற்திட்டத்தின் மூலம் மஹிந்தோதய தொழில்நுட்ப வித்தியாபீடப் பாவனைக்கென கைத்தொழில், சிவில் மற்றும் இலத்திரனியல் பொறியியல் உபகரணங்கள் மற்றும் 7 வகைத் துணைப் பொருட்கள் 166 என்பன ரூபா 1697.64 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்படுவதற்கான ஒப்பந்தம் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் குறைபாடுகள் வெளியாகின.

- கூறு விலைகளைப் பகுப்பாய்வு செய்கையில் தொகுதி ரீதியாகப் பகுப்பாய்வு செய்யாது ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் பகுப்பாய்வு செய்யப்பட்டிருப்பின் ஒப்பந்தத்தைக் குறைந்த கூறு விலையில் வழங்கியிருக்கலாம். 07 தொகுதிகளுள் 02 தொகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது விடய ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டிருப்பின் ரூபா 55.73 மில்லியனுக்குப் பெறக் கூடியதாக இருந்த உபகரணங்களும் கருவிகளும் ரூபா 66.52 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- தொழில்நுட்ப வித்தியாபீடப் பாவனைக்குத் தேவையான 166 பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், ரூபா 373.44 மில்லியன் பெறுமதியான 71 பொருட்கள் மாத்திரமே மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தேவையான அளவை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு மாத்திரமே கூறு விலைகள் கோரப்பட்டிருப்பின் பொருட்கொள்வனவின்போது போட்டியுடனான கொள்வனவின் மூலம் பெறக்கூடிய பொருளாதார இலாபத்தை ஈட்டியிருக்கலாம்.

(ix) 250 வித்தியாபீடங்களுக்கு உபகரணங்களும் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டு குறித்த வித்தியாபீடங்களுக்கு அவை வழங்கப்பட்டிருந்தன. எனினும், செயற்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்ட அறிக்கைகளின் பிரகாரம் 86 தொழில்நுட்ப வித்தியா பீடங்களே அவற்றைப் பயன்படுத்தியிருந்தன.

(ஆ) அறிவுபூர்வமான சமூகத்திற்கான செயற்திட்டம்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், குறித்த செயற்திட்ட நிதியத்திலிருந்து தீவில் உள்ள 1,644 பாடசாலைகளுக்குப் பாடசாலை இணையதள வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. கணனி இணையதளம் தாமதமாகுதல், அநேக சந்தர்ப்பங்களில் சமிக்ஞைகள் கிடைக்காமை போன்ற பல்வேறு காரணங்களால் அவை பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவற்றுள் 76 தேசிய பாடசாலைகளும் உள்ளடங்கியிருந்தன.

(இ) அறிவுக் கேந்திர அடிப்படையில் பாடசாலைக் கல்வி முறைமையை மீள நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டினது முதல் அரையாண்டின்போது ஒவ்வொரு மாத முடிவிலும் ரூபா 23 மில்லியன் முதல் ரூபா 96 மில்லியன் வரையிலான மீதியும் ஜுலை முதல் செப்டம்பர் வரையான மாதங்களில் ரூபா 37 மில்லியன் முதல் ரூபா 53 மில்லியன் வரையிலான மீதியும் அமைச்சின் வங்கி நடைமுறைக் கணக்குகளில் எஞ்சியிருந்தன.

(ii) அமைச்சினால் 1005 மஹிந்தோய ஆய்வு கூடங்களை நிர்மாணிப்பதற்கு 2012 முதல் 2015 வரை ரூபா 12.58 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 12.24 மில்லியன் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. 989 ஆய்வுகூடங்கள் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதில் 823 ஆய்வுகூடங்களில் 2016 மார்ச் 31 ஆந் திகதியளவில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஏனைய வசதிக் குறைபாடுகளால் எஞ்சிய 166 ஆய்வுகூடங்களும் பயன்படுத்தப்படாதிருந்தன. 07 ஆய்வுகூடங்களை நிர்மாணிக்கும் வேலை முடிவடையாதிருந்ததுடன், 09 ஆய்வுகூடங்களது நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாதுமிருந்தன.

(iii) ஐம்பத்தைந்து ஏனைய பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 149.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2015 நவெம்பர் 30 ஆந் திகதியளவில் அப்பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலைகளை முடிவு செய்யத் திட்டமிட்டிருந்தபோதும், 2016 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் அந்நிர்மாண வேலைகள் முடிவடையவில்லை. செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 15 ஆசிரியர் விடுதிகளது நடவடிக்கைகள் 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் முடிவடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் வேலை ஆரம்பமாகி இருக்கவில்லை. இதற்குப் புறம்பாக 18 தேசிய பாடசாலைகளில் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வது 2015 நவெம்பர் 30 ஆந் திகதியளவில் முடிவடைய எதிர்பார்க்கப்பட்டதுடன் அதன் பொருட்டு ரூபா 26.73 மில்லியன் செலவிடப்பட்டுமிருந்தது. 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் அந் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

(iv) கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 77 ஆய்வுகூடங்களில் 06 ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது சுவர்களும் நிலமும் வெடிப்புக்குள்ளாகியிருந்தமை மற்றும் கீறல்கள் ஏற்பட்டிருந்தமை போன்ற தரக் குறைவுகள் அவதானிக்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டில் நிர்மாண

வேலையை முடிவு செய்து, கணனிகள் போன்ற உபகரணங்களை வழங்கியிருந்த வேத்தர மஹா வித்தியாலயத்தின் ஆய்வுகூடம் 2016 மார்ச் மாதமளவில் மூடப்பட்டிருந்ததும் தெரிய வந்தது.

(v) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 143 தேசிய பாடசாலைகள் அடங்கலாக 353 பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) த்திற்கென தொழில்நுட்பப் பாடக் கல்வி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 40,589 மாணாக்கர் அப்பாடங்களைத் தெரிவு செய்திருந்ததுடன், தொழில்நுட்ப விடயக் கல்வி வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் புகட்டுவதற்கு 334 ஆசிரியர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(vi) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், தீவின் 2015 க.பொ.த(சாதாரண தரம்) பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் விஞ்ஞான பாடங்களில் A மற்றும் B பெறுபேறுகளைப் பெற்றவர்கள் 16.61 சதவீதமாக இருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின்போது அது 13.07 சதவீதமாக இருந்தது.

(vii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த(உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றிய 210,340 பாடசாலை விண்ணப்பதாரிகளுள் 8.64 சதவீதமான 18,183 பேர் சகல பாடங்களிலும் சித்தியடையாதிருந்தனர். 5,930 மாணாக்கர் அல்லது 2.83 சதவீதமானோர் சகல பாடங்களிலும் A சித்தியைப் பெற்றிருந்தனர்.

(viii) 2015 ஆம் ஆண்டில் முதற் தடவையாக இலங்கையில் நடைபெற்ற க.பொ.த(உயர் தர) பொறியியல் மற்றும் உயிரியல் விஞ்ஞான தொழில்நுட்பப் பாடத்தில் முறையே 50.09 சதவீத மற்றும் 60.66 சதவீதமானோர் சித்தியடைந்திருந்தனர். 11 விண்ணப்பதாரிகள் மாத்திரம் சகல பாடங்களிலும் A சித்தியைப் பெற்றிருந்ததுடன், பௌதீக விஞ்ஞானத்தில் 51.6 சதவீதமும் உயிரியல் விஞ்ஞானத்தில் 48.03 சதவீதமும் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கான தகைமைகளைப் பெற்றிருந்தனர். செயற்திட்டப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் க.பொ.த(உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுள் வணிக மற்றும் கலைப் பாடங்களுக்கும் அதிகமாகக் கூடிய சதவீதமானோர் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பாடங்களின் வாயிலாகப் பல்கலைக்கழகப் பிரவேசத்தை எதிர்பார்த்திருந்தனர். எனினும், வணிக பாடங்களைக் கற்ற பாடசாலைப் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு 70.38 சதவீதமான பெருமளவு தகைமைகளைப் பெற்றிருந்தனர்.

(ix) க.பொ.த(உயர் தரம்) பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடையாதோரது எண்ணிக்கை கடந்த 2 ஆண்டுகளில் அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் 5.39 சதவீதமாகவும் 12.17 சதவீதமாகவும் இருந்த பெண்களதும் ஆண்களதும் சித்தியெய்யாத சதவீதம் 2015 ஆம் ஆண்டில் முறையே 06.16 சதவீதமாகவும் 13.37 சதவீதமாகவும் அதிகரித்திருந்தது.

(x) ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி எய்துவோரின் சதவீதம் கடந்த 3 ஆண்டுகளின்போது தொடர்ந்து வீழ்ச்சிக்குள்ளாகியதுடன், 2013 ஆம் ஆண்டில் 10.12 சதவீதமாக இருந்த சித்தியெய்தும் சதவீதம் 2015 ஆம் ஆண்டின்போது 09.55 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3.11 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

நீச்சல் தடாக நிர்மாண வேலைக்கான நிதிக்கென கொழும்பு தேசிய ஆண்கள் பாடசாலை ஒன்றினால் சேகரிக்கப்பட்ட ரூபா 6,000,000 தொகையானது 2007 டிசெம்பர் 19 ஆந் திகதியன்று நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அம் முதலீட்டுப் பெறுமதி ரூபா 20,203,796 ஆகியிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஜுலை 25 ஆந் திகதியளவிலும் குறித்த நீச்சல் தடாகத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 3.12 செயலாற்றல்

2015 வருடாந்தப் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

### (அ) போதியளவு நிறைவுறாத பிரதான பணிகள்

அமைச்சு பிரதான பணிகளைப் போதியளவு நிறைவேற்றியிராததுடன், அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) புலமைப் பரிசில்களை வழங்குவதன் மூலம் அங்கவீனமான மற்றும் காணாமற்போன சிறுவர்களது கல்வி மேம்பாட்டிற்கும் அதனோடு தொடர்புடைய துணை விடயங்களுக்கும் ஏற்பாடு செய்வதை நோக்காக் கொண்டு 1999 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க யுனெஸ்கொ புலமைப் பரிசில் நிதிய அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் நோக்கத்தை ஈடேற்றுவதற்கென நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. 1999 முதல் 2011 வரை நிதியத்திற்கு ரூபா 10,263,494 கிடைக்கப் பெற்றிருந்ததுடன், குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவிற்கு அந்நிதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2015 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தரவுக் களஞ்சியத்தை நிறுவுதல், தெரிவு செய்யும் விதிமுறைகளைத் திட்டமிட்டுப் பகுப்பாய்வு செய்தல், புலமைப் பரிசில்களை வழங்குதல் என்பன 2016 மார்ச் மாதமளவிலும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதியத்திற்காகப் பணம் சேகரித்தல், பிரசாரத்தில் ஈடுபடுதல் என்பவற்றிற்கு ரூபா 120,000 செலவழித்துச் சுவரொட்டிகளையும் கொடிகளையும் தயாரித்து 2016 மார்ச் முடிவளவில் 06 மாதங்களுக்கு மேலாகியிருந்தபோதும், அவை பிரசார நடவடிக்கைகளுக்கெனப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 1999 ஜுன் 04 ஆந் திகதியன்று நிதியம் உருவாக்கப்பட்டு, கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நாளலவில் 16 ஆண்டுகள் கடந்த நிலையிலும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு யுனெஸ்கோ நிதியம் தவறியிருந்தது.

(ii) 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி வழங்கப்படும் பயிற்சிப் பாடசாலை (மேலதிக ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தினது 25 ஆம் பிரிவின்படி 05 முதல் 14 வயதுக்குட்பட்ட வயதினரான சிறுவர்களுக்குக் கல்வி வழங்கும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதெனினும், அதற்கு இனங்காதவாறு ஏறக்குறைய 214 சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்தப் பாடசாலைகளில் மனிதவள

மற்றும் பௌதீக வளங்களது தரத்தை அளவீடு செய்தல் மற்றும் பாடவிதானங்கள் தேசியக் கல்விக் கொள்கைப்படி அமுலாகின்றதா எனப் பரிசீலிப்பதற்கு முறையான கொள்கைகளும் நியமங்களும் இருக்கவில்லை. புதிய கல்விச் சீரமைப்புகளின்போது தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகளை முறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாக செயலாளர் அறிவித்திருந்தார்.

(iii) அரசாங்க உதவியைப் பெறும் மற்றும் பெறாத 80 பாடசாலைகளுள் 54 பாடசாலைகளது பதிவுச் சான்றிதழ் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அங்கீகாரமின்றி தனியார் பாடசாலைகளில் உப கிளைகளை ஆரம்பித்து ஆசிரியர்களை ஆட்சேர்த்து, அவர்களுக்கும் அமைச்சினால் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) 2015 ஆம் ஆண்டின்போது 58 தேசிய பாடசாலைகளில் 646 பல்வேறு விளையாட்டுகளில் 33,988 மாணாக்கர் பங்குபற்றியிருந்தனர். வெளியிலிருந்து விளையாட்டுப் பயிற்சிகளை வழங்க வந்தவர்களுக்கு ரூபா 59,937,420 வழங்கப்பட்டு மாணாக்கர்களிடமிருந்து ரூபா 7,398,450 கூட்டுத் தொகையாக அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 சனவரி 29 ஆந் திகதிய 5/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்வேறு விடயங்களுக்கென பாடசாலை மாணாக்கர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் பாடசாலை நடவடிக்கைகளுக்குக் கல்வி அமைச்சால் நிதியேற்பாடு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் செயலாளர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(v) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 38 தேசிய பாடசாலைகளில் உடன்படிக்கைப் பிரகாரம் நிலுவையாக இருந்த வருமானம் ரூபா 4,190,376 ஆகும். எனினும், அவ்வருமான நிலுவையை அறவிடுவதற்குத் தலைமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தேசிய பாடசாலை ஒன்றில் அறவிடப்படாதிருந்த கேட்போர் கூட வருவாய் நிலுவை ரூபா 190,000 ஆகும்.

(vii) தமது பாடசாலைகளில் அல்லது அண்மையில் உள்ள சகோதர பாடசாலைகளில் போதிய கேட்போர் கூட அல்லது மண்டப வசதிகள் இருந்தும் 12 தேசிய பாடசாலைகளினது பல்வேறு விழாக்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான கேட்போர் கூட அல்லது மண்டப வசதிகள் பெறப்பட்டிருந்தன. அதன் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 5,184,584 ஆகும். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் இரண்டு ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைக் குக்குலேகம எனும் இடத்தில் நடாத்துவதற்கு ரூபா 1,141,092 செலவழிக்கப்பட்டிருந்தது.

(viii) தேசிய பாடசாலைகள் இருபத்திரண்டினது 497 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்கள் திருப்பி அளிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்ட 1033 சந்தர்ப்பங்கள் தெரியவந்தபோதும், குறித்த தாமதக் கட்டணம் 2016 மே 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ix) இடமாற்றத்தின்போதும், வெளிநாடு செல்லும்போதும், ஓய்வுபெறுகையிலும் சேவையிலிருந்து நீங்கும்போதும் 21 தேசிய பாடசாலைகளின் 170 ஆசிரியர்கள் திருப்பி ஒப்படைக்காது போன புத்தகங்களின் எண்ணிக்கை 395 ஆகும். அவற்றினது பெறுமதி ரூபா 44,387 ஆகும்.

அப்புத்தகங்களையோ அல்லது அவற்றினது பெறுமதியையோ அறவிடாது அவ்வாசிரியர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(x) 2015 ஆம் ஆண்டின்போது 75 தேசிய பாடசாலைகளின் 1847 கல்விசார் பதவியணியினரும் கல்விசாரா பதவியணியர் 354 பேரும் வழக்கம்போல் தாமதமாக வருகை தந்திருந்தனர்.

(xi) அமைச்சினது சுற்றறிக்கைகளும் கடிதங்களும் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்குத் தமிழில் கிடைக்காத சந்தர்ப்பங்கள் நிலவுவதாகவும் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளுக்கு அழைக்கப்படும் தமிழ்மொழி மூலப் பாடசாலை ஆசிரியர்களுக்குச் செயலமர்வுகளும் விரிவுரைகளும் தமிழில் நடாத்தப்படுவதில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(xii) பல்வேறு சந்தர்ப்பங்களில் 13 தேசிய பாடசாலைகளால் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,929,678 கூட்டுத் தொகையான செயல் நிமித்தக் கட்டு நிதி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(xiii) ஹொரணை தேசிய பாடசாலை ஒன்றில் 2014 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 60 மாணாக்கரில் பௌதீக விஞ்ஞான பாடத்தில் 32 பேரும், இரசாயன பாடத்திற்கான 65 மாணாக்கரில் 46 பேரும், 39 உயர் கணித மாணாக்கரில் 31 பேரும், 254 சாதாரண ஆங்கில பாட மாணாக்கரில் 140 பேரும் சித்தியடையவில்லை.2015 ஆம் ஆண்டில் 6 ஆந் தரம் முதல் 11 ஆந் தரம் வரையான ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அட்டவணைகளின் பிரகாரம் பாடங்களைப் பயிற்றுவித்த காலப் பகுதி 72 சதவீதமாகும்.

(xiv) 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்காய்விற்குத் தேவைப்படும் தகவல்களைக் கோரி 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு 54 தேசிய பாடசாலைகளிலிருந்து 2016 யூன் 30 ஆந் திகதியளவிலும் பதில் கிடைக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்காய்விற்குத் தேவையான தகவல்களைக் கோரி 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு 63 தேசிய பாடசாலைகளிலிருந்து பதில் கிடைக்கவில்லை. அவற்றுள் 06 பாடசாலைகள் 2 ஆண்டுகளுக்குமே பதிலை வழங்காதிருந்தன.

**3.13 வங்கிக் கணக்குச் செயற்பாட்டிலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின்போது தரமான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு 40 தேசிய பாடசாலைகளுக்கு ரூபா 2,748,592 வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,475,910 குறித்த தரப் பொருட்களுக்கெனப் பயன்படுத்தப்படாததால் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அத் தொகை பாடசாலை அபிவிருத்திச் சங்க நடைமுறைக் கணக்குகளில் பயனற்றிருந்தன.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 43 தேசிய பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்குரிய ரூபா 633,803,600 நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

## 3.14 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டின்போது விசேட கல்வி வளத்தகவல் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு திறைசேரியிலிருந்து ரூபா 5 மில்லியன் நிதியேற்பாடாகப் பெறப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி ஆரம்பமாகி 2015 நவெம்பர் 30 ஆந் திகதி முடிவடையவிருந்த செயற்திட்டத்தின் அத்திவாரமிடலுக்கு 2014 ஜுலை 14 ஆந் திகதியன்று ரூபா 243,000 செலவிடப்பட்டிருந்தது. திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,381,783 கேட் மற்றும் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்குச் செலவிடப்பட்டு மேலும் ரூபா 3,146,926 கொடுப்பனவிற்கான பொறுப்பு உருவாகியிருந்தது. குறித்த நிலையத்தை நிர்மாணிக்கும் வேலையை ஆரம்பிப்பதற்கும் காணியின் பூரண உரித்தை அமைச்சு சுவீகரிப்பதற்கும் 2016 ஜுலை 25 வரை இயலாதிருந்தது.

## 3.15 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கொரிய உதவியின் கீழ் வழங்கப்பட்ட 3000 இலத்திரனியல் பியானோக்களில் 100 கிறீன் போட் மற்றும் மணிகள் என்பன கல்வி அமைச்சின் நோக்கெல்லைக்கு உட்படாத முன் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. உதவியாகக் களஞ்சியத்தில் பெறப்படும் பொருட்களும் மாதிரிப் பொருட்களாகக் களஞ்சியத்தில் பெறப்படுவனவும் முறைப்படியும் சரியாகவும் பதிவு செய்யப்படாமையால் களஞ்சியப் பொருட்கள் தொலைந்து போவதற்கும் வேண்டுமென்றே மோசடி செய்யப்படுவதற்கும் வசதி அளிக்கப்பட்டிருந்தது.

## 3.16 நட்டங்களும் இழப்புகளும்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட நட்டங்களும் இழப்புகளும் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஜுன் 22 தொடக்கம் 26 வரை பஹமாஸ் இராச்சியத்தில் நடைபெற இருந்த கொமன்வெல்த் நாடுகளது கல்வி அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்குத் தேவையான வசதிகளைப் பெறுவதற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அம்மாநாட்டில் பங்குபற்றாமையால் டிக்கட் இரத்தாகியும் வீசாக் கட்டணம் மீளப் பெறப்பட முடியாதும் அமைச்சுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 129,400 ஆகும்.

(ஆ) முன்னோடித் திட்டமின்றி ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய, கலவன் பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளுக்குச் சுகாதார வசதிகளை வழங்குவதற்கென ஒரு பாடசாலைக்கு ரூபா 2 மில்லியன் என 1,166 பாடசாலைகளுக்கும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 59.65 மில்லியனும் என ரூபா 2,391.65 மில்லியன் மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தின் அடிப்படையில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. 2012 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அமப/0984/530/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் இதற்கான அடிப்படையாகக் கருதப்பட்டதுடன், அதில் நிதி, திட்டமிடல் அமைச்சரினது (ii) ஆம் அவதானிப்பில் ஆரம்ப பாடசாலைகளின் மின்சாரம், நீர், கழிவறை மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுமிருந்தது. எனினும், கலவன் மற்றும் தேசிய பாடசாலைகளது சுகாதார முன்னேற்றம் தொடர்பாகத் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

(இ) 2012 முதல் 2015 வரை ஏற்பட்ட 6 வாகன விபத்துக்களில் அமைச்சினால் அறவிடப்பட முடியாது போன நட்டம் ரூபா 1,580,886 ஆகும்.

(ஈ) வாகன விபத்தொன்றின்போது அதன் நட்டம் அல்லது இழப்பு சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், 2006 முதல் 2015 வரையான காலப்பகுதியின்போது அமைச்சினது 28 வாகன விபத்துக்களில் 4 விபத்துக்கள் தொடர்பாக 104(3) ஆம் நிதிப்பிரமாணத்தின்படி

ஆரம்ப அறிக்கைளும் 23 விபத்துக்கள் தொடர்பாக பூரண அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆரம்ப அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் 01 முதல் 18 மாத கால தாமதம் நிலவியது.

(உ) கொழும்பு 7 மகளிர் பாடசாலை ஒன்றில் வேலை முடிவடையாதிருந்த உள்ளக விளையாட்டரங்கு நிர்மாண வேலை ஓராண்டு தாமதமாகியமையால் விலை முரண்பாடுகளின் பொருட்டு ரூபா 1,033,278 கூடுதலாகச் செலுத்தப்பட வேண்டியேற்பட்டது.

## 3.17 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாகக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது தெரிய வந்த கொடுக்கல் வாங்கல்களது விபரம் வருமாறு.

(அ) பாடசாலைத் தேவைகளை இனங்காணாதும் பாடசாலைகளில் உள்ள கட்டிடங்களது நீள, அகலங்களைப் பற்றி விசாரிக்காதும் விளையாட்டுத்துறைப் பாடசாலைகளுக்கு ரூபா 3,543,750 பெறுமதியான 72''X42''X4''அளவிலான 500 படுக்கைகளுக்கான மெத்தைகளையும் 72''X30''X4''அளவிலான 625 படுக்கைக்கான மெத்தைகளையும் கொள்வனவு செய்திருந்ததுடன், அம்மெத்தைகள் நியமத்திற்கேற்ப இல்லாமையால் பயன்படுத்தப்பட முடியாதுமிருந்தன.

(ஆ) விளையாட்டுத் துறைப் பாடசாலைகளுக்கு இரு மடிப்புடனான 250 இரும்புக் கட்டில்கள் ரூபா 5,357,065 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவை தரத்திற்கேற்பவும் வடிவமைப்புக்கேற்பவும் வழங்கப்பட்டதை உறுதி செய்யும் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) பெக்கட்களில் காணப்படும் அறிவித்தலில் மாற்றஞ் செய்வதற்கென ஒரு பெக்கட்டிற்கு ரூபா 8 வீதம் களஞ்சியததில் உள்ள 1,179,350 சீருடைப் பெக்கட்களுக்குமென 4 தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 9,434,800 கொடுப்பனவு செய்யப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

(ஈ) கொழும்பு கல்விப் பிரிவில் அமைந்துள்ள தேசிய பாடசாலை ஒன்றிற்கு மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2016 சனவரி மாதத்தில் ரூபா 5 மில்லியன் அமைச்சில் வைப்பிலிடப்பட்டிருந்தது. அக்கொள்வனவிற்குத் தேவையான நடவடிக்கைகள் ஜுன் 2016 வரை தாமதமாகியமையால் 2014 முதல் 2014 பெப்ரவரி வரை மின்பிறப்பாக்கி இயந்திரம் வாடகை அடிப்படையில் பெறப்படுவதற்கு அவ்வப்போது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் ரூபா 1,710,550 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.18 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சு தொடர்பாக முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைவுகள் தொடர்பாக அமைச்சினால் திருத்தஞ் செய்யப்பட்டிராத பந்திகளுடனான தொடர்பு பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **தலைப்பு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 3.15(அ) | கொழும்பு தேசிய மகளிர் பாடசாலை ஒன்றில் உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணித்தல். |
| | 3.15(ஆ) | 2013 செப்டம்பர் 19 ஆந் திகதிய 13/1239/530/031-11 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்காமை மற்றும் வழங்குநருக்கு இருக்க வெண்டிய தகைமைகள் தொடர்பாக முறைப்படி மதிப்பாய்வு செய்யாது, சர்வதேச தரத்தில் அல்லாத மாதிரியில் அமைந்த கணனிகளும் லெப்டொப்களும் அடங்கலாக ஏனைய உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| | 3.16(ஆ) ii | 2006 நவெம்பர் 22 ஆந் திகதிய அமப/06/2125/206/072 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கொழும்பு பாதுகாப்புச் சேவைக் கல்லூரி 2007 சனவரி ஆரம்பமாகிய போதும், கல்லூரியை நடாத்துவதற்குத் தேவையான சட்டபூர்வ வரையறையுடனான அதிகாரச்சட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 3.18(ஆ) | பஸ்யாலை சிறி சங்கபோ விசேட சிறுவர், பாடசாலை கல்வி அமைச்சில் பதிவு செய்யப்படவில்லை. |
| | 3.22(ஏ) | நெனச நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்ட 04 தொலைக்காட்சி இயந்திரங்கள் காணாமற்போயின. |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 2,607 | 1,151 | 1,456 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 1,559 | 1,390 | 171 | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | 38,551 | 40,266 | 2,574 | 4,289 |
| (iv) | ஆரம்ப நிலை | 8,572 | 6,237 | 2,551 | 216 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 242 | 136 | 106 | - |
| | மொத்தம் | 51,531 | 49,180 | 6,858 | 4,507 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு முடிவிலான 6,588 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிகமான 4,507 குறைக்கப்படுவதற்கும் அமைச்சு தவறியிருந்தது.

(ii) முப்பத்தேழு தேசிய பாடசாலைகளில் இரண்டாவது மொழியாக தமிழ் அல்லது சிங்களத்தைக் கற்பிப்பதற்குப் போதிய அளவிலான ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படாததுடன், அதன் பொருட்டு ஆட்சேர்க்கப்பட்ட 41 வெளிவாரி ஆசிரியர்களுக்கு 2015 ஆம் ஆண்டின்போது பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் ரூபா 3,779,386 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(iii) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 39 தேசிய பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் அல்லது ஏனைய நிதியங்களால் சம்பளம் வழங்கப்பட்டு ஆட்சேர்க்கப்பட்டிருந்த கல்விசாராப் பதவியணியினரின் எண்ணிக்கை 196 ஆகும். 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் சம்பளமும் படிகளுமாக ரூபா 26,378,144 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 29 தேசிய பாடசாலைகளில் கல்விசாராப் பதவியணியினர் 143 பேர் மேலதிகமாகவும் 73 தேசிய பாடசாலைகளில் கல்விசாராப் பதவியணியினரின் 778 வெற்றிடங்களும் நிலவின.